‘ஜீவாகாரம்’
தற்போதைய
சூழ்நிலைக்கேற்ப
‘ஜீவாகாரம்’
பாலுடனோ அல்லது
வாழைப்பழத்துடனோ
பிசைந்து உண்ணக் கூடிய
சத்துணவு

அண்ணா
தொழிலகம்
இணுவில்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

பனம்
பொருள்கள்!

புழுக்கொடியல் மா,
ஒடியல் மா
எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம்.

அண்ணா
கோப்பிக்கடை
திருநெல்வேலி.

சுடர் 5: பிரமோதூத ஞு ஆடி மீ 18 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 11 (03 08 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 153

# இராட்சதக் குண்டுகளினால்
# நகரில் 100 வீடுகள் தகர்ந்தன

## நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் புதிய விமானம் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஆக. 3

**நேற்று மாலை யாழ். நகரின்மீது வட்டமிட்ட புதிய ரக விமானம் ஒன்றில் இருந்து வீசப்பட்ட ஐந்து இராட்சதக் குண்டுகளினால் சுமார் நூறு வீடுகள் மற்றும் பல வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் தகர்ந்தன.**

**நான்கு இயந்திரங்களைக் கொண்ட இந்த விமானம் நேற்று நகரில் நடத்திய குண்டு வீச்சு அட்டகாசத்தினால் நகரம் அதிர்ந்தது.**

சுமார் 300கிலோவுக்கு மேற்பட்ட வெடி மருந்துகளைக் கொண்ட இராட்சத அளவுடைய குண்டுகளே நேற்று நகரப் பகுதி மீது வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டுகள் ஒவ்வொன்றும் குடியிருப்புப்பகுதிகளில் விழுந்து பெரும் அதிர்வுடன் வெடித்தபோது, அப்பிரதேசமே கிடுகிடுத்தது. ஒவ்வொரு குண்டினாலும் பத்துக்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகின. அதனிலும் அதிகமான வீடுகள் சேதமுற்றுத் தகர்ந்தன.

நேற்று வீசப்பட்ட குண்டுகளில் ஐந்து குருநகரிலும், யாழ் சிவன்கோவிலடிப் பகுதியிலுமே விழுந்து வெடித்தன.

இதனால் இந்தப் பகுதிகளில் இருந்த சுமார் 50 வீடுகள் தரைமட்டமாயின.

மேலும் ஐம்பதிற்கும் அதிகமான வீடுகள், மற்றும் கடைகள், கட்டடங்கள் சேதமுற்று தகர்ந்தன.

நேற்று மாலை 5 15 மணி முதல் 6 மணி வரை மண்டைதீவுப் பக்கமாகவும், கோண்டாவில் பக்கமாகவும் நீளப் பாதையில் பறந்த மேற்படி பெரிய விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்பட்டன.

விமானத்தின் அடியில் இருந்த, பின்புறக் கதவு திறபட, அதிலிருந்து குண்டுகள் வெளியே தள்ளிவிடப்பட்டன.

பெரிய குண்டுகள் சுழன்றவாறு நிலத்தை நோக்கி வேகமாக வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

விமானம் நல்லூர் பகுதிக்கு மேல் பறந்தபோது அதிலிருந்து விடுவிக்கப்பட்ட குண்டுகள், விமானத்தின் வேகத்துடன் முன்னோக்கிச் சென்று குருநகர் பகுதியில் சென்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக நேபாளத்தில் ஊர்வலம்

நேபாளத்தில் இடதுசாரி மாணவர் அமைப்பு ஒன்று இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக ஊர்வலம் ஒன்றை நடத்தியதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கையில் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும்—

ஐ. நா. சபை மத்தியஸ்தம் செய்து இலங்கை நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் இந்த அமைப்புக் கோரியுள்ளது. [உ-எ]

## கிழக்கில் தாக்குதல்கள்; ஏறாவூரில் சிப்பாய் பலி

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

ஏறாவூரில் நடந்த ஒரு தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். 12 பேர் காயமடைந்தனர்.

வாழைச்சேனையில் இடம்பெற்ற இன்னொரு தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட ஆறு ஆயுதப்படையினர் காயமடைந்தனர். (ஒ-எ)

### முச்சந்தி முரளி



அப்ப ...... கோட்டையைத் தப்ப வைக்க புதுப் பிளான் போடுகினம் போலை......!

## பரந்தனில் தாக்குதல்

பரந்தன் இராணுவ முகாமிலிருந்து கடந்த புதனன்று குமரபுரம்பக்கமாக முன்னேற முயன்ற படையினர்மீது விடுதலைப்புலிகள்தாக்குதல்நடத்தியதாகவும் –

அதனை அடுத்து படையினர் பின்வாங்கி முகாமுக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## டில்லிக்கு ஜா

கொழும்பு, ஆக. 3

இந்தியவெளியுறவுஅமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதற்காகஇலங்கைக்கான இந்தியத் தூதர் என். எம் ஜாநேற்று கொழும்பில் இருந்து புதுடில்லி புறப்பட்டுச் சென்றார். [ஒ-எ]

### சுபநேரம்

3- 8- 90
வெள்ளிக்கிழமை ஆடி 18
சுபநேரம்
06-04— 07-34
இராகுகாலம்
10 34 — 12-04

## வவுனியாப் பகுதியில் மூன்று நாள் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 3

வவுனியா மாவட்டத்தில் நேற்று முதல் நாளைவரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியான உத்தியோகபூர்வமற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இலங்கை பாதுகாப்புப் படையினர் இதற்கான உத்தரவை துண்டுப் பிரசுரம்மூலம் விடுத்துள்ளனர்.

### ஹெலி மூலம் துண்டுப் பிரசுரம்

நேற்று முன்தினம் (புதன்) மாலை இந்தத் துண்டுப் பிரசுரங்கள் ஹெலிக்கொப்டரில் இருந்து வீசப்பட்டன.

பொதுமக்களை கோவில்களிலும் பாடசாலைகளிலும் சென்று தங்குமாறு பணிக்கப்பட்டிருக்கிறது.

### படைகுவிப்பு

இதேவேளை வவுனியாப் பகுதியில் துருப்புக்கள் குவிக்கப்பட்டு வருவதாகவும்–

சண்டி வீதியால் வடபகுதி நோக்கிப் படையினர் முன்னேற முயற்சி மேற்கொள்ள உள்ளதாகவும் –

விடுதலைப்புலிகள் முற்றுகையில் உள்ள மாங்குளம் இராணுவ முகாமை மீட்டெடுக்கும் முயற்சியாக இது இருக்கலாம் என்றும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தன. [ஒ-9]

## கிளிநொச்சி சந்தையில் ஹெலிதாக்கி இளைஞர் பலி!

கிளிநொச்சி லக்சபானா சந்தியில் உள்ள சந்தைப் பகுதி மீது நேற்று முன்தினம் புதன்கிழமை ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியானார். வயோதிப மாது ஒருவர் காயமுற்றார்.

சந்தையில் நின்ற மக்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

உதயநகர் கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணன் பார்த்திபன் [வயது 15]என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி 55 ஆம் கட்டையைச் சேர்ந்த சின்னையா வள்ளியம்மை [வயது 53] என்ற மாது காயமுற்றார். [உ-9]

# யாழ். ஆஸ்பத்திரி பகுதி யுத்த சூன்ய பிரதேசம்!

### அரசு சமர்ப்பிக்கும் யோசனை இதுவாம்

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிப் பகுதியை இராணுவ நடவடிக்கை விலக்கப்பட்ட பிரதேசமாக்கி [De-Militarized Zone] அங்கு சிகிச்சை வசதிகளை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற வாராந்தரப் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது சம்பந்தமாக அரசாங்கம் தயாரித்துள்ள நடைமுறை ஆலோசனைகள், செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவிடமும், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் ஜெனரல் ரணதுங்கா தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரிப் பிரதேசம் இராணுவ நடவடிக்கை விலக்கப்பட்ட பகுதியாகப்பிரகடனப் படுத்தப்பட்டதும் அப்பகுதியில் தாக்குதல்கள் எதையும் நடத்த வேண்டாம் என்று அரசாங்கப் படைகளுக்கு உத்தரவிடப்படும். அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரி இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரபு நாடுகளில் ஆயுதங்கள் வாங்குவதில் ரஞ்சன் மும்முரம்

பக்தாத், ஆக. 3

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா அரபு நாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கைக்கு சில நாடுகள் ஆயுதங்கள் வழங்கப் பின்னடிக்கத் தொடங்கியதை அடுத்தே, அமைச்சர் ரஞ்சன் அரபு நாடுகளுக்கு நேரடியாக விஜயம் செய்துள்ளார் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-எ)

## 38 மாணவரை பலி கொண்ட பஸ் - ரயில் விபத்து சம்பவம்; சாரதிக்கு 190 வருட சிறை!

கொழும்பு, ஆக. 3

கடந்தஆண்டு ஆரம்பத்தில் அஹங்கலவில் இடம்பெற்ற ரயில் – பஸ் விபத்து ஒன்றில் 38பாடசாலை மாணவர்கள் உயிரிழந்தனர் அல்லவா?

விபத்துக்குள்ளான பஸ்ஸை செலுத்திவந்தசாரதிக்கு பலப்பிட்டிய மேல்நீதிமன்றம் 190 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் மேற்படி சாரதிக்கு எதிராக கைமோசக் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருந்தது

ஒரு கொலைக் குற்றத்துக்கு ஐந்து வருட சிறைத்தண்டனை வீதம் 38 பேரைக் கொலை செய்ததற்காக 190 வருட சிறைத்தண்டனையை விதிப்பதாகவும் –

இத் தண்டனையைத் தொடர்ச்சியாக அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தனது 32 பக்கத் தீர்ப்பில் உத்தரவிட்டார். [உ-எ]

# குவைத் நாட்டை நேற்று ஈராக் கைப்பற்றியது!

## திடீர் படையெடுப்பால் ஆட்சி கவிழ்ப்பு

வாஷிங்டன், ஆக. 3

குவைத் நாட்டின் மீது ஈராக் நேற்று அதிகாலை படையெடுத்தது.

குவைத்தலை நகரில் உள்ள மன்னர் எமிரின் மாளிகை உட்பட டெலிவிஷன் மற்றும் வானொலி நிலையங்கள், தகவல் அமைச்சு ஆகியவற்றை ஈராக் ஆயுதப்படைகள் கைப்பற்றின.

குவைத் மன்னர் மாளிகையில் ஈராக் படைகள் நிலை கொண்டு உள்ளன.

குவைத் துறைமுகத்தையும் ஈராக் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன.

குவைத் தலைநகரில் நூற்றுக் கணக்கான ஈராக் ஆயுதப் படையினரின் கவச வண்டிகள் கேந்திர இடங்களில் நிலை கொண்டுள்ளன.

குவைத் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அங்குள்ள புரட்சியாளர்கள் புதிய அரசை நிறுவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவில் நேற்று

## பொம்மர் குண்டு வீச்சுடன் ஹெலியை இறக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 3

முல்லைத்தீவில் நேற்று இரண்டு பொம்மர்கள் கடும் தாக்குதல்களை நடத்த அவற்றுக்கு மத்தியில் ஹெலிக்கொப்டர் ஒன்றை முல்லைத்தீவு முகாமிற்குள் தரையிறக்க முயற்சி எடுக்கப்பட்டது

ஆனால் விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதலினால் ஹெலி இறக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலினால் டிப்போவில் நின்ற இரண்டு பஸ்கள் சேதமுற்றதாகவும் அறியவந்தது.

இதேவேளை–

நேற்று முல்லைத்தீவு முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட படையினர் இருவர் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி கால்களை இழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு முகாமின் காவல் அரண் ஒன்றின் மீதும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். (உ-9)

## இலங்கை துணைத் தூதரை அகதிகளைபார்வையிட பணிப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 3

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்குச் சென்று பார்வையிடும்படி சென்னையில் உள்ள இலங்கையின் துணைத் தூதரை இலங்கை அரசு பணித்துள்ளது.

இத் தகவலை ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன் நேற்று செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இலங்கையில் இருந்து செல்லும் தமிழ் அகதிகளுக்கு தமிழக அரசு தொழில் வாய்ப்பு, கடனுதவி ஆகியன வழங்குவது, பெரும் எண்ணிக்கையில் அங்கு செல்வதற்கு தூண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### கல்வி

வீட்டில் இருந்து பயிற்சிபெற 1-ம் ஆண்டு, 2-ம் ஆண்டு தமிழ் செயல் நூல் விற்பனையாகிறது. ஆக்கம் க. சொக்கலிங்கம் M.A. கிடைக்குமிடம்பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மக்மில்லன், வஸ்தியன் புத்தகசாலைகள். (13975)

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### கோழித்தீன்

உங்களுக்குத் தேவையான தரமான கோழித்தீன் வகைகள் தயாரித்துக்கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும், சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [13962]

### கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த கிளீன் கட் ஸ்தாபனம், பிறவுண் வீதியில் 37, சிவகுருநாதன் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) தற்போது இயங்கி வருகிறது. (C/5291)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) இன்சரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை [13961]


# வந்த பொருள் போதாது
# பங்கீட்டு முறை தொடரும்

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ். மாவட்டத்துக்கு வாகன அணி மூலமாகவும், கப்பல் மூலமாகவும் வந்து சேர்ந்த உணவுப் பொருள்கள் பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானவை அல்ல: ஆதலால் பங்கீட்டு அடிப்படையில் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்டவாறு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறையின் கீழ் ஒரு குடும்பத்துக்கு ஒரு கிலோ மாவும், ஒரு கிலோ அரிசியும் வழங்கப்படும்.

குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் தலா 100 கிறாம் சீனி வீதம் வழங்கப்படும்.

பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் இந்த நடைமுறை தேவையான பொருள்கள் வரும்பட்சத்தில் அதிகரிக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். [இ-3-5]

# அரசுக்கு எதிரான இறுதி யுத்தமே இன்று நடக்கிறது

## பயிற்சிக் கருத்தரங்கில் உரை

கொடிகாமம், ஆக 3

இன்று நாம் ஸ்ரீலங்கா அரசுடன் நடத்தும் யுத்தம் பெரியதும் இறுதியானதுமாகும்: புலிகளுக்குப்பின் மக்களும் மக்களுக்குப் பின் புலிகளும் நின்று எமது இறுதி லட்சியமான தமிழீழத்தைப் பெற முன்வரவேண்டும்.

தற்பாதுகாப்பு பயிற்சிக் கருத்தரங்கில் உரையாற்றிய கொடிகாம வட்டார செயலகப் பொறுப்பாளர் திரு. இராகுலன் இவ்வாறு கூறினார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் திரு. பொ. கந்தையா தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

தொடர்ந்து பேசும்போது அவர் கூறியதாவது எமது போராளிகள் ஆழமான தியாகத்தை செய்கின்றனர் என்பதை மக்கள் முற்றாக உணரவேண்டும். சிலர் தமது பிள்ளைகளை வெளியூர் அனுப்புகிறார்கள். மற்றவர்கள்தான் போராடவேண்டும் என்ற எண்ணம் போதும்.

பல முகாம்களிலிருந்தும் வெளியேற இராணுவம் முயற்சிக்கின்றது. எமது இளைஞர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் சண்டைபுரிகின்றார்கள் எனவே சகலரும் பூரண ஒத்துழைப்பு தர வேண்டும்.

ஆனையிறவு முகாமில் யுத்தம் செய்யும் இளைஞர்களில் பெரும்பாலானோர் பிற மாவட்ட இளைஞர்கள். எமது பிரதேச இளைஞர்களும் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இப்படி அவர் கூறினார். [இ-75]

## விலைகள் சிறிது இறக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 3

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் நேற்று சிறிது இறக்கம் காணப்பட்டது.

சீனி கிலோ 45 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் போத்தல் 60 ரூபாவாகவும், தீப்பெட்டி ஒன்று 2ரூபாவாகவும் நேற்று விற்பனை செய்யப்பட்டன.

வெளிச் சந்தையில் இப்பொருள்கள் கிடைக்கத் தொடங்கியதே விலை இறக்கத்துக்குக் காரணமாகும்.

அதேசமயம் அரிசி விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. (இ-10)

## கொப்பேகடுவவின் கொடும்பாவி

யாழ்ப்பாணம், ஆக.3

பத்துத் தினங்களில் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பேன் என்று சூளுரைத்த வடக்கு இராணுவத் தளபதி கொப்பேகடுவவின் கொடும்பாவி தற்போது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் எரிக்கப்பட்டு வருகிறது. (இ-18)

## முதலுதவி சிகிச்சை நிலைய

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ்ப்பாணம் தட்டாதெரு வாசிகசாலையில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந் நிலையப் பொறுப்பாளராக யாழ். மாநகரசபை சுகாதாரப்பரிசோதகர் திரு. பெ. துரைராசா கடமையாற்றுகிறார். (இ - 18)

# தேங்காய் எண்ணெய்க்கு பதிலாக 'மாஜரீன்' பாவனை

யாழ்ப்பாணம், ஆக.3

தேங்காய் எண்ணெய்க்கு தற்பொழுது தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் 50ரூபா வரை விற்கப்படுகிறது.

இதனால் பலர் இதற்குப் பதிலாக தற்பொழுது மாற்றீடு ஒன்றை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் பொருள் மாஜரீன். கோவில்களிலே தேங்காய் எண்ணெய் விளக்குக்குப்பதில் மாஜரீனை சிறு துண்டாக வெட்டி திரியை அதில் செருகி எரிக்கின்றனர். உருகியமாஜரீன் சுடர் விட்டு எரிகிறது. இது மட்டுமல்ல. மாஜரீனை உருக்கி போத்தலில் விட்டு சமையலுக்கும் பாவிக்கிறார்கள். (இ-9)

## முதலுதவி வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ். மாவட்ட திரி சாரணர் குழுவின் நல்லூர் பிரிவினர் யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் முதலுதவி வகுப்புக்களை நடத்தி வருகின்றனர். (இ-5)

## திருத்தம்

நெல்லியடி கன்பொல்லை வீதியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பாறுபதி 27.7.90 இல் காலமானார். 1.8.90 ஆம் திகதிய உதயனில் வெளியான மரண அறிவித்தலில் காலஞ் சென்றவரின் பெயர் செல்லத்துரை பானுமதி என்று தவறுதலாக அச்சாகி விட்டது.


## யாழ். புதிய உயர் கல்லூரியின் சமூக சேவைப் பிரிவு, "தென்றல்" அங்கத்தவர்களுக்கான கூட்டம்

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம்: 05 - 08 - 1990 (ஞாயிறு) காலை 10 மணி

பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்வதற்காக புதிய உயர் கல்லூரியின் சகல விரிவுரையாளர்களையும், மாணவர்களையும், பழைய மாணவர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தங்கள் பகுதிகளில் அகதிகளுக்காக சேகரிக்கப்பட்ட பொருள்களையும் அன்றைய தினம் கொண்டு வருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

கா. யோ. கிரிதரன்,
(தலைவர்)
''தென்றல்''

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-5296)


## ஓராண்டு நினைவு நாள்



### கார்த்திகேசர் பஞ்சாட்சரம்

வையகவாழ்வு: 04-12-1907    ஸ்ரீவைகுண்டவாழ்வு: 13-08-1989

(திதி: 03-08-1990)

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாக கொண்டவரும் இறுதிக்காலம் வரை வட்டுகிழக்கு சித்தன்கேணியில் வசித்த வரும் ஸ்ரீசிவயோக சுவாமிகளின் சிடருமாவார்—
தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

தங்களின் நினைவுடன் வாழும்:
மனைவி, மகள், பேரப்பிள்ளைகள்,
தகவல்: திருமதி பஞ்சாட்சரம்.

வட்டுகிழக்கு,
சித்தன்கேணி. (13964)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### வினாசித்தம்பி கணபதிப்பிள்ளை
[Retired Officer - Bank of Ceylon]

மலர்வு: 05- 04- 1916    உதிர்வு: 13 08- 1989

திதி: 03 - 08 - 1990

கண்ணை இமை காப்பது போல்
வண்ண முறக் காத்து வந்தீர்கள்
பாழும் விதியால் எம்மை விட்டு
பாதியில் சென்று விட்டீர்கள்
ஆண்டொன்று ஓடினாலும்
ஆறவில்லை நம் சோகம்
நீங்கவில்லை எம் நெஞ்சை விட்டு!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/ 5293)

## அறிவித்தல்

திறந்த பல்கலைக்கழக விஞ்ஞானமாணி, தொழில்நுட்ப மாணவர்களுக்கு கீழ் குறிப்பிட்ட பாடங்களின் இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் 4ஆம் திகதிக்கும், 15 ஆம் திகதிக்கும் (இரண்டு நாட்களும் உட்பட) திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளது.

1. PSU 1114
2. PSU 1017
3. MAF 2601
4. LSE 1603
5. TEF 2301
6. TED 2302
7. TCF 2301
8. TMF 2302
9. TCD 2302
10. PSF 2604
11. TMF 2301
12. CSD 2303
13. TCD 2303
14. CSD 2302
15. TCD 2304
16. TED 2304
17. TND 2301
18. TND 2302
19. TND 2304
20. TED 2301

மேலும் விவரங்களுக்கு உடன் யாழ். பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

க. கருணாகரன்,
உதவிப் பணிப்பாளர்,
இலங்கைத்
திறந்த பல்கலைக்கழகம்


## இடமாற்றம்

★ மண்டேலா ரேடர் ★
இல. 02, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் இயங்கி வந்த எமது புத்தகசாலை தற்போதைய நாட்டின் நிலை காரணமாக கீழ் காணும் முகவரியில் 01- 08- 1990 தொடக்கம் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

மண்டேலா ரேடர்,
(புத்தகசாலை)
550/8A, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(13973)


## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



திரு.
### செல்லையா சிவஞானசம்பந்தன்
(ஓய்வு பெற்ற அதிபர், சரவணையூர் சோதிடர்)

தோற்றம்: 29- 12- 1927    மறைவு: 04- 07- 1990

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்வின் வழி காட்டியாய் வாழ்ந்து எம்மை எல்லாம் தவிக்க விட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைஞ்சும்!

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

''சிவமகால்''
சரவணை மேற்கு,
வேலணை. (13966)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



அமரர்
### ● வயித்தி - சுப்பையா ●
(பிரபல தோடம்பழ வியாபாரி)

தோற்றம்: 02- 05- 1924    மறைவு: 04- 07- 1990

கண்ணை இமை காப்பது போல எங்களைக் காத்து இறுதியில் மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், மைத்துனர்கள்.

1/7, அன்னசத்திரலேன்,
யாழ்ப்பாணம். (13978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தடுப்பு வழி இதுதான்

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தினால் அகதிகளாவோருக்கு, மன்னாரில் ஒரு முகாமை அமைப்பதில் இலங்கை அரசாங்கம் தீவிர அக்கறை காட்டி வருகிறது. அதனை நிர்வகிக்கும் பொறுப்பை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமே ஒப்படைக்கப் போவதாக பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா அடிக்கடி செய்தியாளர் மாநாடுகளில் கூறி வருகிறார்.

வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் இன்னும் போர் நடந்து கொண்டு தான் இருக்கிறது. அது ஓயவில்லை. அதனால் தினமும் தமிழ்ப் பொது மக்கள் இறந்த வண்ணமே உள்ளார்கள். அந்த மரணத்தில் இருந்து தப்புவதற்காக, தமது உயிரைப் பாதுகாப்பதற்காகத் தான் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்கிறார்கள்.

ஈழத் தமிழ் அகதிகளுக்கு மனிதாபிமான ரீதியிலேயே தமிழகம் - இந்தியா - உதவி வருகிறது. சகோதர பாசத்துடன் தான் மாநில அரசு அவர்களின் அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்கிறது. உணவு, உடை, உறைவிடம் ஆகிய வசதிகளுடன் மாணவர்களுக்குக் கல்வி, தற்காலிக தொழில் வாய்ப்பு என்பவற்றையும் வழங்க அது முயற்சிகள் மேற்கொண்டுவருகிறது

தமிழக மக்களின் மனிதாபிமான உணர்வையும், சகோதர பாசத்தையும் கண்டு கொழும்பு அரசு பயப்படுகிறது; நடுநடுங்குகிறது! அரசியல் நோக்கத்தோடு இந்த உதவிகள் செய்யப்படுகின்றனவோ என்று அஞ்சுகிறது; தேவையில்லாமல் அலட்டிக் கொள்கிறது!!

அகதிகளைப் பராமரிக்கும் விவகாரத்தை வைத்து இந்தியா தன் மீது அரசியல் அழுத்தத்தைச் செலுத்தி விடுமோ என்ற பயம்தான் மன்னாரில் அகதிமுகாம் என்ற பசப்பு.

தமிழ் மண்ணின் ஒவ்வொரு அங்குலத்திலும் ஸ்ரீலங்கா அரசுப்படைகளின் ஆயுதங்கள் தமிழ் மக்களின் இரத்தத்தைத் தினமும் குடிக்கின்றன. அப்படியிருக்க மன்னாரை மட்டும் பாதுகாப்பான பிரதேசமாக அந்தப் படைகள் பேணும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? தாமே தாக்குதல்களை நடத்திவிட்டு, புலிகளின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்தோம் அகதிமுகாம் மக்கள் இடையில் அகப்பட்டு விட்டார்கள் என்று பின்னர் கதை சொல்லத் தெரியாதவரா ரஞ்சன்?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிப் பகுதியை அமைதிப் பிரதேசமாக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக வைக்கப்பட்ட கோரிக்கையை உதறித் தள்ளிய அரசு, மன்னாரில் முகாம் அமைக்கும் பகுதியை மட்டும் அமைதிப் பிரதேசமாகப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்கும் என்பது என்ன நிச்சயம்?

ஈழத்தமிழர்கள் எந்த நாட்டுக்குமே அகதிகளாகச் செல்ல வேண்டும் என்று நாம் விரும்பவில்லை. அவர்கள் சொந்த மண்ணில் கஷ்டப்பட்டாவது அதன் சுதந்திரத்துக்கும், சுபீட்சத்துக்கும் உழைக்கவேண்டும். உயிராபத்து என்று வரும் வேளையில் ஸ்ரீலங்கா அரசு அமைக்கும் அகதி முகாம்களில் இருப்பதைவிட, அயலில் உள்ள தமிழகச் சகோதரர்களை அண்டித் தஞ்சம் புகுவது மேலானது.

ஈழத்தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வதைத் தடுப்பதற்குக் கொழும்பு அரசு விரும்பினால், அகதிமுகாம் அமைப்பதல்லத் தீர்வு. யுத்தத்தை உடன் நிறுத்தி, தமிழர்களின் உயிரழிவை நிறுத்தி, அவர்களின் உரிமைகளைத் தாமதமின்றி, நிபந்தனையின்றி வழங்கவேண்டும். செய்யுமா அப்படி?

## உப்பு உற்பத்தி ஸ்தம்பிதம்; தட்டுப்பாடு வரலாம்

காங்கேசன்துறை, ஆக. 3

ஆனையிறவில் பெருமளவு உப்பு தேடுவாரற்று சேகரிக்காமல் விடப்பட்டுள்ளது. இதனால் யாழ். குடாநாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்படுமோ என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையாலும் பதற்ற நிலையாலும் ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் யாழ். குடாநாட்டுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் உப்புக் கூட்டுத்தாபன செயற்பாடுகள் ஸ்தம்பித்து விட்டன.

இந்த ஊழியர்கள் யாழ். செம்மணியில் உள்ள உப்புக் கூட்டுத்தாபன கிளை நிலையத்தில் தற்போது சமுகமளித்து வருகின்றனர்.

ஆனையிறவு உப்பளம் ஸ்தம்பித்த நேரத்தில் அங்கு 35 ஆயிரம் மெற்றிக் தொன் சுத்திகரிக்கப்பட்ட உப்பு விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அதைவிட உப்புப் பாத்திகளில் 1,500 மெற்றிக் தொன் உப்பு விளைந்திருந்தது. (இ-68)

## உதவி அரச அதிபர் மூலம் தர்மப்பணம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ். மாவட்டத்தில் தர்மப்பணம் பெறுபவர்களுக்கு இனி உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாகவே அவர்களுக்குரிய படிப்பணம் வழங்கப்படும்.

இது வரை தபால் நிலையங்கள் மூலமாகவே இந்தப் படி வழங்கப்பட்டுவந்துள்ளது.

தபால் நிலையங்களில் போதிய கொடுக்கல் வாங்கல் இல்லாத காரணத்தால் உதவி அரசாங்க அதிபர் மூலம் பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## முன்னர் சென்ற தினங்களில் கிளினிக்குக்கு செல்லலாம்

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிய சகல கிளினிக்குகளும் புதன்கிழமை தொடக்கம் மானிப்பாய் மெமோறியல் யாழ். வைத்தியசாலைப் பிரிவில் இயங்க ஆரம்பித்துள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையில் எந்தெந்த நாட்களில் நோயாளர்கள் கிளினிக்குக்குச் சென்றார்களோ அதே நாட்களில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கும் செல்லலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளினிக்குக்கு செல்பவர்கள் தமது திகதி அட்டை, வார்ட்டில் வழங்கப்பட்ட நோய்க் குறிப்பு அட்டை ஆகியவற்றைக் கொண்டு செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல கிளினிக்குகளும் காலை 8.30 மணியில் இருந்து 10.30 மணிவரை நடைபெறும் என யாழ். ஆஸ்பத்திரி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10))

## மல்லாவியில் ஹெலி தாக்கு; எண்மர் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், ஆக,3

மல்லாவிப் பகுதியில் புதன் நண்பகலளவில் ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் பொது மக்களில் 8 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன் [வயது 15, பனிச்சங்குளம்], சதாசிவம் அரசரத்தினம் [வயது 32 -பாண்டியன் குளம்], வள்ளிகனகு [வயது 53 - பனிச்சங்குளம்], மரியதாஸ் சந்தப்பிச்சை [வயது 30 - குஞ்சுக்குளம்], வெள்ளைச்சாமி வீரையா [வயது 54 - புதிய கொலனி, மாங்குளம்], துரைசாமி கனகரத்தினம் [வயது 34- 2ஆம் யூனிற், வவுனிக்குளம்], சோமசுந்தரம் குணேஸ்வரன் [வயது 15 - 2 ஆம் யூனிற், யோதபுரம்], சிதம்பரப்பிள்ளை துரைராசா [வயது 25 - 2 ஆம் யூனிற், யோகபுரம்]. (ஒ-9)

## கேணல் பொறுப்பேற்ற பின்பும் வவுனியா நகரில் பிரவேசிக்க தொடர்ந்து தமிழருக்கு தடை

வவுனியா நகர சிவில் நிர்வாகத்தை இராணுவ இணைப்பதிகாரி கேணல் ரத்நாயக்கா பொறுப்பேற்ற பின்பும் மன்னார், யாழ்ப்பாணம் வீதிகளில் தொடர்ந்தும் தமிழர் பிரயாணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தமிழர் குளக்கரையால் ரம்பைக்குளம் சென்றே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்டுகிறது.

மன்னார், யாழ்ப்பாணம் வீதிகளால் செல்வதற்கு மக்கள் பீதி அடைகின்றனர்.

இராணுவ சென்றியில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்படுவதே இதற்குக் காரணமாகும். (இ-5-3)

## தொண்டர் நிறுவனங்களும் கப்பல் மூலம் உணவுப்பொருள்?

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசு சார்பற்ற நிறுவனங்கள் கப்பல் மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டுள்ளன.

சர்வோதயம், றெட்பானா போன்ற தொண்டர் நிறுவனங்கள் இது தொடர்பாக தமது தலைமை அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன.

இங்குள்ள அகதிகளுக்கு ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை இதன் மூலம் நீக்கலாம் என்று பிரஸ்தாப அமைப்புகள் கருதுகின்றன. (ஒ-3)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

#### சண்முகா, அருளை ஈவாய்!

''ஹெலி'' வரும் சத்தங் கேட்டுக்
கிலிகொளும் மக்கள் உள்ளம்
நலிவதை நல்லை வேளே!
நவிலவே ஏலா தையா!
சலிப்புறும் மக்களுக்குச்
சண்முகா! அருளை ஈவாய்
நலிகிறோம் நாடோறும் யாம்
நல்லருள் புரிகு வாயே!

கவியரசு வெண்பாமணி முருகதாசியன்
[இன்று நல்லூர் கந்தசுவாமி 8 ஆம் திருவிழா]

## முல்லைத்தீவில் மக்கள் வங்கி மட்டுமே இயங்குகிறது

### அரச ஊழியர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஆக. 3

முல்லைத்தீவில் மக்கள் வங்கி நாளாந்தம் ஒருமணி நேரம் இயங்குகிறது. ஆனால் இலங்கைவங்கி செயற்படுவதில்லை.

மக்கள்வங்கி செயற்படுவதால் ப. நோ. கூ. சங்கங்களும், பொதுமக்களும் தமது கொடுக்கல் வாங்கல்களைச் செய்கிறார்கள்.

ஆனால் அரச திணைக்களங்களின் கணக்குகள் உள்ள இலங்கைவங்கி செயற்படாததால் அரச ஊழியர்கள் தமது சம்பளக் காசோலைகளை மாற்றமுடியாது உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## மூளாய் வந்த அகதிகளுக்கு உதவி

கொழும்புத்துறை, ஆக. 3

இராணுவத் தாக்குதல்களினால் அகதிகளாக மூளாய் சென்றடைந்தவர்களுக்கு மூளாய் கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்று நிவாரணம் அளித்தது.

அகதிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அகதி முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். தற்போது அந்த அகதி முகாமுக்குச் செஞ்சிலுவைச் சங்கம், போரூட் நிறுவனம், சிற்றூர் அவை ஆகியன உதவி வருகின்றன. [ஒ-30]

## வேண்டுகோள்

கொழும்புத்துறை, ஆக. 3

''தமிழருக்கு நீதிவேண்டியும், மக்கள் அவலம் நீங்கவும், பட்டினி பஞ்சம் நீங்கி அமைதி ஏற்படவும், நோன்பும் பிரார்த்தனையும் அவசியம்'' இவ்வாறு திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-30)

## பங்கீட்டு அட்டை

திருநெல்வேலி, ஆக. 3

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள கடைகளில் உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்கு பங்கீட்டு அட்டை வழங்க உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார். (ஒ-143)

## திறந்த பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 3

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் நடத்தப்படும் சில குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதா அல்லது அதனைப்பகிஷ்கரிப்பதா என்பது குறித்து முடிவு செய்யும் ஆலோசனைக் கூட்டம்இன்று 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் நடைபெறும். (இ)

## மன்னாரிலும் உணவுக் கப்பல்

யாழ்ப்பாணம், ஆக.3

மன்னார் மாவட்டத்துக்கான உணவுப் பொருள்கள் அடங்கிய கப்பல் ஒன்று அங்கு சென்றடைந்தது.

மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் இந்தக் கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறு நேற்று கொழும்பில் இருந்து தமது ஊழியர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

அரச அதிபர் இன்று மன்னாருக்கு வருவார் என எதிர் பார்க்கப் படுகிறது. (ஒ- 3)

## உணவுப்பொருள் விலை தீவுப்பகுதியில் உயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 3

தீவுப்பகுதியில் உணவுப் பொருள்கள் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளன. தட்டுப்பாடும் நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிக்கு நேரடியாக உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அராலியூடாக பொருள்களைக் கொண்டு செல்வதில் சிக்கல் இருப்பதாகவும் போக்குவரத்து செலவீனம் அதிகரித்துள்ளதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## இடம் பெயர்ந்த ஊழியர் கடமை

பச்சிலைப்பள்ளி, ஆக. 3

வெளிமாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றி இடம் பெயர்ந்து வந்த வைத்தியர்கள், தாதிகள் உட்பட 90 பேர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர்.

## இந்திய மீனவர்கள் எங்கே?

சென்னை, ஆக 3

தூத்துக்குடி மணப்பாடு என்ற இடத்தில் இருந்துபடகு ஒன்றில் புறப்பட்ட ஏழு இந்திய மீனவர்கள் காணாமல் போய்விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் இந்தியக் கரையோரக் காவல் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இம்மீனவருக்கு என்ன நடந்தது என்பது கண்டுபிடிக்கப்படும் வரை தொழிலுக்குச் செல்ல தூத்துக்குடி மீனவர் மறுத்து வருகின்றனர்.

இதனால் சுமார் 200 இயந்திரப் படகுகள் தூத்துக்குடியில் செயலிழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## மரண பயத்தில்வாழும் மாணவர்கள் பரீட்சைக்குப் படிக்க முடியுமா?

### உயர்தரப் பரீட்சையை நிறுத்தக் கோரி மகஜர்

இம்மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையையும் ஐந்தாம் வருடப் புலமைப் பரிசில் பரீட்சையையும் ஒத்தி வைத்து, அவற்றைப் பின்னர் வசதியான, பொருத்தமான திகதிகளில் விரைவில் நாடு முழுவதும் நடத்த உத்தரவிடும்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் யாழ்ப்பாணம் மாவட்ட சம்மேளனம் ஜனாதிபதி பிரேமதாஸாவை மகஜர் மூலம் கோரியுள்ளது.

மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது;

★ வடக்கு - கிழக்கு யுத்த நிலைமை காரணமாக மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

★ தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சு, ஹெலிக்கொப்டர் தாக்குதல், ஷெல் தாக்குதல்கள் ஆகியவற்றினால் நூற்றுக்கணக்கான அப்பாவிமக்கள் இறந்துள்ளனர்.

★ மரணபயத்தினால் வாழும் மக்களின் உடல், மனோநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

★ அத்தியாவசிய தேவைகளான குடிநீர் மின்சாரம், எரிபொருள் போக்குவரத்து, தொடர்புசாதனங்கள், உணவுப்பொருள்கள் ஆகியன மக்களுக்கு கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது.

★ இப்பரீட்சைகளை எடுக்கும் மாணவர்கள் பன்னிரண்டு மாதகால கல்வி போதனைக் காலத்தை இழந்துள்ளனர். இதனால் அவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால், இப்பரீட்சைக்குரிய பாடவிதானங்களைப் பூர்த்தி செய்ய முடியாமற்போய்விட்டது.

★ பெரும்பாலான பரீட்சார்த்திகள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர். தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் அவர்கள் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு பரீட்சையை எடுக்கக் கூடிய மனோநிலையில் அவர்கள் இல்லை. உடல்ரீதியாக படிப்பைத் தொடரமுடியாத நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்ச்சி காரணமாக பாடப்புத்தகங்களையும் அவர்கள் இழக்கவேண்டியதாயிற்று.

★ தற்போதைய யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த அகதிகள் அரைவாசிக்கு மேற்பட்ட பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

★ விமானக்குண்டு வீச்சு, ஷெல்தாக்குதல் காரணமாக பல பாடசாலைகள் சேதமடைந்தன; தளபாடங்களும் சேதமடைந்துள்ளன.

★ ஜே.வி.பி. இயக்க நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருந்த சமயம் 1989 ஆகஸ்டில் நடைபெறவிருந்த ஜி.சி.ஈ. உயர்தரப்பரீட்சை 1989 டிசம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டது. 1989 டிசம்பரில் நடைபெறவிருந்த ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சை 1990 ஏப்ரலில் நடத்தப்பட்டது.

1990 ஜூலை கடைசிப்பகுதியில் நடைபெறவிருந்த ஜி சி.ஈ. உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு தற்போதைய கல்வி அமைச்சர் பெருமனதுடன் ஒத்திவைத்திருக்கிறார். ஆகவே இக்காரணங்களுக்காக எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையை ஒத்திவைக்காது நடத்துவது நீதியை மறுக்கும் செயலுக்கு ஒப்பாகும்.

ஜி.சி.ஈ. உயர்தரப்பரீட்சையும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் வெறும் தகுதிகாண் பரீட்சைகள் அல்ல; போட்டிப் பரீட்சைகளாகும்.

—இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

03 8 1990 வெள்ளிக்கிழமை


"விடுதலை கிடைத்ததாக உணர்கிறேன்"

# பதவி நீக்கத்தினால் தமக்கு நிம்மதி என்கிறார் தேவிலால்

## லொறி மீது ஹெலி சூடு

யாழ்ப்பாணம், ஆக. 3

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறிமீது ஹெலி வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. லொறிக்கிளினர் படுகாயமுற்றார்.

புதன்கிழமை மாலை 5 மணியளவில் விளாத்திக்குளம் என்னும் இடத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த லொறி கிளினரான சந்திரன் என்னும் சரம்டன் வாசி மானிப்பாய் வைத்திய சாலையில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டார். (இ-10-3)

## கிளிநொச்சி செயலகம் ஜெயந்தி நகரில்

யாழ்ப்பாணம், ஆக 3

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க செயலகம் குமரபுரத்திலிருந்து தற்போது ஜெயந்தி நகருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

சகோதர ஊழியர்கள் அனைவரையும் கடமைக்கு சமுகம் கொடுக்கும்படி அரசாங்க அதிபர் திரு.கே.மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ-30)

## ரஞ்சனின் கொடும்பாவி

கோப்பாய், ஆக 3

கோப்பாய் — நீர்வேலிப் பகுதிகளில் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் கொடும்பாவிகள் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் எரிக்கப்பட்டன. [இ-72]

## தேவாலயம் சேதம்

யாழ்ப்பாணம், ஆக 3

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் ஊர்காவற்றுறை புனித யாகப்பர் தேவாலயம் சேதமடைந்தது. [இ-3]

## ஆடிவேல் தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஆக 3

நயினை ஸ்ரீ காட்டுக் கந்த சுவாமியார் ஆலயத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை ஆடிவேல் தீர்த்தமும் அன்னதானமும் நடைபெறும்.

## முதலுதவி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்படஉள்ளன என்று யாழ் முறைசாராக் கல்வி அதிகாரி திரு. எஸ் சுப்பிரமணியம் தெரிவித்தார். [இ-3]

## நெல் திருடியவருக்கு தண்டனை

யாழ்ப்பாணம், ஆக. 3

அல்லைப்பிட்டியில் இருந்து அகதியானவரின் வீட்டில் அரைமூடை நெல்லைக் களவாடிய நபர் ஒருவர் விழிப்புக் குழுவிடம் சிக்கினார்.

நெல்மூடையுடன் அவர் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட நபர், பின்னர் அவர் திருடிய அரைமூடை நெல்லுடன் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். [இ-3]

## செய்திச் சாரம்

## நேற்றுச் சென்ற அகதிகள்

சென்னை, ஆகஸ்ட் 3

நேற்றும் சுமார் ஆயிரத்து 500 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர். (ஓ-எ)

## பங்கீட்டு பொருள் விநியோகம்

காங்கேசன்துறை, ஆகஸ்ட் 3

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் இன்று (வெள்ளி) முதல் பங்கீட்டுப் பொருள் விநியோகம் இடம்பெற உள்ளது.

பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ அரிசியும், ஒரு கிலோ மாவும், ஆளுக்கு 100 கிராம் சீனியும் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (ஓ-68)

## குளிர் தாங்காது வள்ளத்தில் இறந்த சிசு!

யாழ்ப்பாணம், ஆக 3

குருநகரைச் சேர்ந்த குடும்பம் ஒன்று அகதியாக தமிழகம் சென்ற வேளை அவர்களது ஆறு மாதக் குழந்தை வள்ளத்தில் குளிர் தாங்காது இறந்த பரிதாபகரமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தனுஷ்கோடியில் குழந்தையின் சடலம் அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## மாணவர் ஒன்றியக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 3

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியத்தின் சகல பாடசாலைகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் நடைபெற இருக்கிறது. (இ-3)

## ரஷ்யாவில் பத்திரிகை சுதந்திரம்

மாஸ்கோ, ஆக 3

சோவியத் யூனியனில் பத்திரிகைச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்டத்தை மாஸ்கோ அரசு கொண்டு வந்து உள்ளது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சோவியத் பிரசை எவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றை எதுவித கட்டுப்பாடும் இன்றி இனி மேல் வெளியிடலாம். (அ-எ)

## தமிழ்நாட்டில் சோதனைக் குழாய் சிசு!

சென்னை, ஆக. 3

தமிழ் நாட்டில் முதலாவது சோதனைக் குழாய் குழந்தை நேற்று சென்னை மருத்துவ மனையில் பிறந்தது.

2 கிலோ 700 கிறாம் எடையுள்ள இக் குழந்தையை 46 வயதான பெண் அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவித்தார்.

முதலமைச்சர் மு கருணாநிதி மருத்துவமனைக்குச் சென்று இச் சாதனையைப் புரிந்த டாக்டர்களைப் பாராட்டினார். (ஓ-எ)

## மானிப்பாயில் ஈ.சி.ஜி.

யாழ்ப்பாணம், ஆக. 3

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முதல் இதயத் துடிப்பு வரை படப் (ஈ.சி.ஜி) பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையில் இதற்கென இருந்த உபகரணங்கள் மானிப்பாய்க்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பொருத்தப்பட்டுள்ளன. இப்போது தொழில் நுட்பவியலாளர்களும் கடமைக்குச் சமுகம் தர ஆரம்பித்ததை அடுத்து இந்தப் பிரிவு நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது. (அ-9)

## கருணாநிதி வி. பி. சிங்கை சந்தித்தார்

புதுடில்லி, ஆக 3

தமிழ்நாடு முதலமைச்சர் மு கருணாநிதி நேற்று புதுடில்லி சென்றார்.

பின்னர் அவர் பிரதமர் வி. பி சிங்கைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

தேவிலாலை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றியதால் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து இருவரும் பேசியதாகச் சொல்லப்பட்டது. (இ-எ)

## ● அவரின் வீடும் தப்பவில்லை!

கொழும்பு, ஆகஸ்ட் 3

வவுனியா ரயில் நிலையம் முன்னால் இருக்கும் துணை அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரனின் வீடும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

திருமதி புலேந்திரன் அண்மையில் வவுனியா சென்றிருந்த போது வீடு கொள்ளையடிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். [அ-எ]

## நாச்சிக்குடாவில் 300 குடும்பங்கள்

குருநகர், ஆகஸ்ட் 3

யாழ் முஸ்லிம் வட்டாரம், யாழ்நகரம், குருநகர் போன்ற பகுதிகளில் இருந்து பூநகரி- நாச்சிக்குடாப் பகுதியில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 4000, பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு அரச நிவாரணமாக வழங்கப்பட்ட முதல் கட்ட நிவாரணம் தவிர்ந்த வேறு உதவிகள் கிடைக்கவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## மாற்று சக்திவளம் பற்றி ஆய்வு

யாழ்ப்பாணம், ஆக. 3

இன்றைய நிலைக்கு ஏற்றவாறு மாற்று சக்தி வளம் பற்றி ஆய்வு செய்வதில் தமிழீழ ஆய்வு நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது அதுதொடர்பான புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், வரைபடங்கள் வைத்திருப்போர் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியிலுள்ள ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவற்றை கொடுத்துதவலாம் என்ற தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 3

தமிழ் மக்களின் விடிவிற்காகவும் சுபீட்சத்திற்காகவும் இறைவன் அருள் வேண்டி இன்று [வெள்ளி] இணுவில் [illegible]

புதுடில்லி, ஆக. 3

சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டது போன்ற உணர்வைப்பெற்றேன்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் திரு தேவிலால் பகிரங்கமாக வெளியிட்ட முதலாவது கருத்து இது ஆகும்.

துணைப் பிரதமர் மற்றும் விவசாய அமைச்சர் பதவிகளில் இருந்து பிரதமர் சிங்கின் சிபார்சின் மீது ஜனாதிபதி வெங்கடராமன் திரு. தேவிலாலை பதவி நீக்கம் செய்தார்.

புதன் நள்ளிரவுக்குச் சற்று முன்னர் தான் தேவிலாலைப் பதவி நீக்கம் செய்யும் கடிதத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டார்.

அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்புக்கு தேவையான சகல அம்சங்களையும் தேவிலால் மீறிவிட்டார் என்றும்-

சக அமைச்சர்கள் சிலர் மீது சுமத்திய ஊழல் புகார்களை நிரூபிக்க அவர் தவறிவிட்டார் என்றும் —

போலிக் கடிதம் தொடர்பாக தனது விளக்கக் கடிதத்தில் அவர் ஏதுமே கூறவில்லை என்றும் — பிரதமர் திரு. வி. பி. சிங் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருந்தார்.

பதவி நீக்கச் செய்தியை அறிவித்ததும் திரு தேவிலால், ' எனக்கு நிம்மதி கிடைத்துவிட்டது'' - என்று சொன்னார்.

தேவிலால் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து, நாடாளுமன்ற விவகார துணை அமைச்சர் ஒருவரும் பதவியை இராஜினாமாச் செய்தார். (இ-எ)

## பதவி நீக்கம் சரியானதா? மக்களே தீர்மானிப்பர்!

### தேவிலாலின் மகன் கூறுகிறார்

எனது தந்தையாரை அமைச்சரவையில் இருந்து பிரதமர் வெளியேற்றியது சரியா, பிழையா என்பதை மக்கள் தீர்மானிப்பர்.

இப்படி தேவிலாலின் புதல்வரும் ஹரியானா முன்னாள் முதலமைச்சருமான ஓம்பிரகாஷ் சௌதாலா தெரிவித்தார்.

தேவிலாலை பதவி நீக்கம் செய்வதைத் தவிர பிரதமர் சிங்குக்கு மாற்று வழியே கிடையாது என்று பாரதிய ஜனதாத் தலைவர் எல்.கே. அத்வானி தெரிவித்தார்.

ஜனதாதள் கட்சி மோசடிகளுக்கும் ஏமாற்றுகளுக்கும் இடமான கட்சி என்பது அம்பலமாகி விட்டது என்று இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் கருத்து வெளியிட்டார். (இ-எ)

## குவைத் மன்னர் எமிர் சவூதி அரேபியாவில் தஞ்சம்

ரியாத், ஆக. 3

குவைத்தின் மன்னர் எமிர் தனது குடும்பத்தினருடன் ஹெலிக்கொப்டர் மூலம் தப்பிச் சென்று சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இரவோடிரவாக குவைத்தினுள் ஈராக் படைகள் புகுந்த உடனேயே மன்னர் தப்பிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது (ஓ-எ)

## இராணுவ நடவடிக்கை அமெரிக்கா எடுக்காது!

வாஷிங்டன், ஆக. 3

குவைத்தை ஆக்கிரமிப்புச் செய்ததற்காக ஈராக்மீது உடனடியாக இராணுவ நடவடிக்கை எதனையும் எடுக்கப் போவதில்லை என்று அமெரிக்கா அறிவித்தது.

அதேநேரத்தில் வளைகுடாவில் தனது ஆறு யுத்தக் கப்பல்களையும் அதி உஷார் நிலையில் அமெரிக்கக் கடற்படை வைத்திருப்பதாக வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது (உ-எ)

## இராட்சதக் குண்டு---

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

விழுந்து வெடித்தன.

குருநகர் 4 ஆம் குறுக்குத் தெரு பகுதியில் விழுந்து வெடித்த குண்டினால் அந்த வீதியில் இருந்த சகல வீடுகளும் தரைமட்டமாகின. 3 ஆம், 5ஆம், குறுக்குத் தெருக்களில் இருந்த சுமார் 50வீடுகள், மற்றும் பாலர் பாடசாலை ஒன்று, மேலும் கடைகள் சேதமடைந்தன.

குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு அண்மையில் விழுந்த மற்றொரு குண்டினால் அப்பகுதியில் மேலும் பல வீடுகள் சேதமுற்றன ஏற்கனவே சில நாட்களுக்கு முன்னர் விமானக் குண்டுவீச்சினால் இப்பகுதியில் சேதமுற்றிருந்த வீடுகள் இக்குண்டினால் தரைமட்டமாகின.

குருநகர் றெக்கிளமேசன் வீதிப் பகுதியில் உள்ள கேணி ஒன்றின் அருகில் விழுந்த மற்றொரு குண்டினால் அவ்வீதியிலும், புதிய கடற்கரைவீதி, ஓடக்கரை வீதி ஆகியவற்றிலும் இருந்த பல வீடுகள் தரைமட்டமாகின.

கே. கே. எஸ். வீதியின் வண்ணை சிவன் கோயிலுக்கு அண்மையில் உள்ள எஸ் ஆர். எஸ். கட்டடத்திற்கு பின்புறம் விழுந்த குண்டு ஒன்றினால் அப்பகுதியில் இருந்த நகைத் தொழிலாளர்களின் பல பட்டடைகள் தகர்ந்தன. 25 இற்கும் மேற்பட்ட கடைகளும் சேதமுற்றன [உ-9-5]

## குவைத்...

யுள்ளதாகவும்-

அவர்களின் அழைப்பை ஏற்று ஈராக் படைகள் அங்கு சென்றுள்ளன என்றும் ஈராக் புரட்சிக் கவுன்ஸில் பக்தாத் வானொலி மூலம் அறிவித்தது.

இக் கவுன்ஸிலின் தலைவராக ஈராக் ஜனாதிபதி சத்தாம்ஹுசெய்ன் இருக்கிறார்.

எண்ணெய் உற்பத்தியை குவைத் அதிகரித்தது தொடர்பாக அந்த நாட்டுடனான ஈராக்கின் உறவு மோசமடைந்து வந்தது.

## இலங்கை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல் அளிப்பதாக அமைகின்றது.

மனிதாபிமான அடிப்படையில் தமிழக அரசு இந்த உதவிகளைச் செய்தாலும், அங்கு வழங்கப்படும் உதவிகள் குறித்து எமது அரசு கவலை அடைகின்றது — என்று திரு. பிராட்மன் வீரக்கூன் தெரிவித்தார். (ஓ எ)

## யாழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ விலக்குப் பிரதேசமாக்கப்பட்டால், கோட்டையில் இருக்கும் இராணுவத்தினர் விலக்கப்படுவார்களா என்பது குறித்து ஜெனரல் ரணதுங்கா விளக்கமாக எதுவும் சொல்லவில்லை.

### இந்திய வானொலி தகவல்

ஆனால்— புதியயோசனைப் படி

எந்த விதமான ராணுவ அமைப்புக்களும் நகரினுள் அமைக்கக் கூடாது என்றும் —

இருக்கும் இராணுவ அமைப்புக்களை அகற்றிவிடவேண்டும் என்று அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் —

இந்திய வானொலி அறிவித்தது.

யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியையும் மண்டைதீவுப் பகுதியையும் இராணுவ நடமாட்டம் இல்லாத அமைதிப் பிராந்தியமாக பிரகடனபடுத்த அரசு ஆலோசித்து வருகிறது. — என்று இந்திய வானொலி இன்னொரு செய்தியில் தெரிவித்தது.

பிரகடனம் செய்யப்பட்ட பகுதியில் இராணுவ நடமாட்டமே இருக்காது என்றும்—

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதனைக் கண்காணித்துக்கொள்ள அனுமதிக்கப்படும் என்றும்—

ஜெனரல்ரணதுங்கா சொன்னதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இபக்கம் யாழ்ப்பாண தீபகற்பம் முழுவதையுமே இராணுவ நடமாட்டமில்லாத பிரதேசமாகப் பிரகடனஞ்செய்ய வேண்டும் என்று கோரியிருப்பதாகவும்— அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

யாழ் மருத்துவமனையைச் சூழ உள்ள பத்து சதுரமைல் பகுதியை இராணுவ நடவடிக்கை விலக்கப்பட்டபிரதேசமாக்குவதற்கு அரசு ஆலோசனை தெரிவித்திருப்பதாக ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்என்று பி.பி.ஸி. அறிவித்தது.

அரசின் யோசனை ஏற்கப்பட்டால், யாழ். ஆஸ்பத்திரியும் இயங்கமுடியும், கோட்டை இராணுவ முகாமும் செயற்பட முடியும் — என்று செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த ஜெனரல் ரணதுங்கா கூறியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இதே வேளை, அரசின் யோசனை விடுதலைப்புலிகளினால் ஏற்கப்பட்டால், அது நடைமுறைக்கு வரும் பட்சத்தில் கண்காணிப்பு வேலையைச் செய்வதற்கு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் தங்குவதற்காக, நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அறைகள் பதிவுசெய்யப் பட்டிருப்பதாக உதயன் அலுவலகச் செய்தியாளர் தெரிவிக்கிறார். (அ-எ-9)

## தெரிந்த நாடு தெரியாத விவரம்

லண்டன், ஆகஸ்ட் 3

ஈராக் நேற்று குவைத் மீது படையெடுத்து அதனை சுலபமாகக் கைப்பற்றியது அல்லவா? ஈராக் பெரிய நாடாகவும், அதிக ஜனத் தொகை மற்றும் படைப்பலம் கொண்டிருந்ததாலுமே இப்படையெடுப்பில் அது சுலபமாக வெற்றியீட்டியது.

இரு தரப்பு படைபலம் மற்றும் ஜனத் தொகை விபரம் வருமாறு:-

| | குவைத் | ஈராக் |
|---|---|---|
| விஸ்தீரணம் — | 6,880 ச. மைல் | 1,69,235 ச. மைல் |
| சனத்தொகை — | 18,73,000 | 1,64,76,000 |
| முப்படையினர்— | 13,100 பேர் | 8,45,000 |

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org